This Page Intentionally
Left Blank

# புதன் கிழமை



ஸ்ரீ ரமணாச்ரமம்
திருவண்ணாமலை
2002

# ஏகான்ம விவேகம்

1. தனதியல்பாகிய சொரூபத்தை மறந்து 'உடலே நான்' என்று எண்ணி பல பிறவிகளை எடுத்து இறுதியில் தன்னை உணர்ந்து தானாக நிலைபெறுவது, கனவில் உலகம் முழுதும் சுற்றிவிட்டு இறுதியில் விழிப்பது போன்றது.

2. எப்போதும் ஆத்ம சொரூபமாகவே தான் இருந்தும், நான் யார்? நான் இருக்கும் இடம் எது? என்று தன்னைத் தானே விசாரிப்பது, அதே கேள்விகளைக் கேட்கும் மது உண்டு மயங்கிய மனிதனுக்கு இணையாவான்.

3. சத்-சித்-ஆனந்த ஆத்மாவாகிய தனக்குள்ளே உடல் இருக்கவும் ஜடமான உடலுக்குள் ஆத்மா இருப்பதாக அஞ்ஞானத்தினால் நினைப்பவன், சித்திரத்திற்குள் அதற்கு ஆதாரமான திரை இருக்கிறது என்று கருதுபவனைப் போன்றவனாவான்.

# ஏகான்ம விவேகம்

## நூல்

(கலிவெண்பா)

*தன்னை மறந்து தனுவேதா னென்னி*
*யெண்ணில் பிறவி யெடுத்திறுதி — தன்னை*
*யுணர்ந்துதா னாத லுலகசஞ் சாரக்*
*கனவின் விழித்தலே காண்க — வனவரதம்* *1*

*தானிருந்துந் தானுகத் தன்னைத்தா னெவன்*
*யானிருக்குந் தான மெதுவெனக்கேட் — பானுக்கு*
*யானெவ னெவ்விடம் யானுள னென்றமது*
*பானனை யீடு பகர்சச்சித் — தானந்தத்* *2*

*தன்னுட் டனுவிருக்கத் தானச் சடவுடலந்*
*தன்னு ளிருப்பதாத் தானுன்னு — மன்னவன்*
*சித்திரத்தி னுள்ளுளதச் சித்திரத்துக் காதார*
*வத்திர மென்றெண்ணு வான்போல்வான் — வத்துவாம்* *3*

4. ஆதாரவஸ்துவாகிய ஆபரணங்கள் அனைத்தும் பொன்னால் ஆனவை, அதைவிட்டு வேறாகாது. அதுபோல் ஆத்மாவாகிய சொரூபத்தைவிட்டு சரீரத்திற்கு இருப்பு ஏது? அஞ்ஞானி தன்னை தேகம் என்பான். தன்னை உணர்ந்த ஞானி அனைத்தையும் தானாக, ஆன்மாவாக உணர்வான் என்பதை உணர்.

பொன்னுக்கு வேறாகப் பூடண முள்ளதோ
தன்னை விடுத்துத் தனுவேது — தன்னைத்
தனுவென்பா னஞ்ஞானி தானாகக் கொள்வான்
றனையறிந்த ஞானி தரிப்பாய் — தனதொளியால் 4

5. உள்ளத்துள் எப்போதும் உள்ளது, ஒன்றான அந்த ஏகாத்ம வஸ்துவே. ஆதி காலத்தே ஆதிகுரு தக்ஷிணாமூர்த்தி அவ்வஸ்து சொரூபத்தை சொல்லாமல் சொல்லி (மௌன வியாக்கியானத்தால்) தெரியுமாறு செய்தார் என்றால், அதை இப்போது யாரால் கூற இயலும்.

எப்போது முள்ளதவ் வேகான்ம வத்துவே
யப்போதவ் வத்துவை யாதிகுரு — செப்பாது
செப்பித் தெரியுமா செய்தன ரேலெவர்
செப்பித் தெரிவிப்பர் செப்புகென — விப்போதவ் 5

---

6. ஏக ஆன்ம சொரூபமாக விளங்கும் குரு ரமணன், 'ஏகான்ம பஞ்சகம்' என்னும் நூல் மூலம், ஏக ஆன்மாவின் இந்த உண்மை நிலையை உள்ளவாறு தெளிவித்து,தேகமே ஆன்மா என்ற அன்பர்களது தேக பாவனையை நாசமாக்கினான்.

ஏகான்ம வுண்மை யினைத்தெனத் தேற்றியன்பர்
தேகான்ம பாவஞ் சிதைவித்தான் — ஏகான்ம
ஞான சொரூபமா நண்ணுங் குருரமணன்
றானவின்ற விப்பாவிற் றான்.

---

*ஏகான்ம பஞ்சகம் – நூல் வரலாறு:*

*1947 ஆம் ஆண்டு ஒருநாள் 'திருச்சுழி வெண்பா அந்தாதி' என்ற புத்தகத்தைப் பற்றி குறிப்பிட்ட ஸ்ரீ பகவான் "நான் மலைமேல் இருந்தபோது நாயனாவிடம் வெண்பா லக்ஷணத்தைச் சொல்லி வடமொழியிலோ, தெலுங்கிலோ வெண்பா எழுதும்படி கூறினேன். நாயனா, நரசிங்கராவ் ஆகியோர் பலமுறை முயன்றும் பலனில்லை" என்று சூரிநாகம்மாவிடம் கூறினார். "நாயனாவே இந்த வெண்பா (சுக்ல சந்தஸ்) முறையில் பாடல் இயற்ற முடியவில்லை என்றால் ஸ்ரீ பகவான்தான் தெலுங்கில் எழுத வேண்டும்" என்றார், சூரி நாகம்மா. மூன்று நாட்களுக்குப் பிறகு ஸ்ரீ பகவான் சிறு காகிதத் துண்டுகளில் நாகம்மாவிடம் கொடுத்துத் தான் தெலுங்கிலும் பின்னர் தமிழிலும் எழுதிய 'வெண்பா' சுலோகங்களைக் காட்டினார். நாகம்மாவும் முருகனாரும் ஸ்ரீ பகவானிடம் மேலும் சில வெண்பாக்களை தெலுங்கில் இயற்றினால் அந்த பாஷைக்கும் ஒரு புதிய சந்தஸ் கிடைத்த பெருமை உண்டாகும் என்று வேண்டிக் கொண்டார்கள்.*

*மறுநாள் ஸ்ரீ பகவான் மேலும் இரண்டு வெண்பாக்களை இயற்றி "ஏகாத்ம பஞ்சகம்" என்று பெயரிடலாம் என்றும் ஆலோசனை கூறினார். ஸ்ரீ பகவான் இதனை தமிழில் இயற்றியதும் முருகனார் அதற்கு ஒரு முடிவுரைப் பாடல் இயற்றினார். இதனையும் ஸ்ரீ பகவான் தெலுங்கில் மொழி பெயர்த்தும் பின்னர் கலிவெண்பாவாக அமைத்தும் மற்றும் மலையாள மொழியிலும் இதனை மொழி பெயர்த்து அருளினார். 'ஏகாத்ம பஞ்சகம்'; 'ஏகாத்ம விவேகம்'; 'ஏகாத்ம தத்வம்' என்று வழங்கப்படும் இதுவே ஸ்ரீ பகவானால் இயற்றப்பட்ட மூல கிரந்தங்களில் கடைசியாகும்.*